Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk
தமிழ்Mirror
MONDAY, JULY 28 2025
திங்கட்கிழமை 28, ஜுலை 2025 | ஒளி: 10 கதிர் 292 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## புதிய கல்விச் சீர்திருத்தம்

# “ஒட்டுமொத்த முறைமையும் மாற்றி அமைப்பதாகும்”



கல்விச் சீர்திருத்தம் என்பது வெறுமனே புதிய பாடப்புத்தகங்களை அறிமுகப்படுத்துவது அல்ல, மாறாக ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் மாற்றி அமைப்பதாகும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

‘வளமான நாட்டிற்காக பெண்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக’ என்னும் தலைப்பில் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட மகளிர் ஒன்றியம் இரத்தினபுரி நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடலில் கலந்துகொண்டபோது பிரதமர் இவ்வாறு கூறினார்.

கல்விச் சீர்திருத்தம் குறித்து மேலும் உரையாற்றிய பிரதமர், பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் சுமையாக அமையாத கல்வி முறைமையை உருவாக்குவது தமது அரசியல் இயக்கத்தினுள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயம் என்றார். இது தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தமானது புதியதோர் பாடப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல, ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் மாற்றி அமைக்கும் ஒரு செயல்திட்டமாகும். நாம் இந்த முறைமைக்குள் கண்டிருக்கும் பல முக்கிய பிரச்சினைகள் உள்ளன. பரீட்சைகளை மையமாகக் கொண்ட இக்கல்வி முறைமையினால் சிறார்கள் மீது ஏற்படும் அழுத்தம், அதனால் பெற்றோருக்கு ஏற்படும் அழுத்தம், அதனால் ஏற்பட்டிருக்கும் போட்டியினால் உருவாகி இருக்கும் தீமையான சமூக விளைவுகள் போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விடை காண நாம் இக்கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் முயற்சிக்கின்றோம் என பிரதமர் விளக்கமளித்தார்.

தொடர்ச்சி P2



# 101 என்பு தொகுதிகள் மீட்பு

யாழ்ப்பாணம் - அரியாலை செம்மணி சிந்துப்பாத்தி பகுதியில் உள்ள 2 மனித புதைகுழிகளில் இருந்தும் சனிக்கிழமை (26) அன்று 11 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 09 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சனிக்கிழமை (26) அகழ்ந்து எடுக்கப்பட்ட 09 எலும்பு கூட்டு தொகுதியுடன், 90 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 101 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2



## மதுபோதையில் அடாவடி:

# NPP யின் அமைப்பாளர் உட்பட 8 பேர் கைது

■ நிதர்ஷன் வினோத்

மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின் மகிமைமிக்க மாதா சொரூபத்தை மதுபோதையில் உடைத்து சேதப்படுத்திய சந்தேகத்தின் பேரில் வேலணையை சேர்ந்த 8 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் தேசிய மக்கள் சக்தியின் (NPP) தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 8 பேரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



# ஆற்றில் அடித்துச் சென்ற குழந்தை சடலமாக மீட்பு

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெவோன் நீர்வீழ்ச்சிக்கு நீர் ஏந்தி செல்லும் கொட்டகலை ரொசிட்ட பகுதியில் உள்ள ஆறு ஒன்றிலிருந்து 4 வயதுடைய பெண் குழந்தை, சனிக்கிழமை (27) அன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வுக்கு செல்லவிருந்த தாய், தனது மகளை தயார்படுத்தி விட்டு, தான் தயாராகிக் கொண்டிருந்த வேளை, அந்த குழந்தை வீட்டின் அருகில் இருந்த ஆற்றில் தவறுதலாக விழுந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் குறித்த குழந்தையை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஈடுபட்ட போது, சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு பின்னர், குழந்தை சடலமாக மீட்கப்பட்டு கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட குழந்தை கொட்டகலை ரொசிட்டா தோட்டத்தைச் சேர்ந்த நான்கு வயதுடைய கிரேக்சிக்கா நெகோமி என அடையாளம் காணப்பட்டுள்ளது, சடலம் சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள- பத்தனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# புதிய பிரதம நீதியரசர் பதவியேற்றார்

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று பதவியேற்றார். இவர், இலங்கையின் 49ஆவது நீதியரசராவார்.

முன்னாள் பிரதம நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர்னாண்டோ ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நீதியரசர் சூரசேனவின் பெயர், ஜனாதிபதியால் அரசியலமைப்பு சபைக்கு அனுப்பப்பட்டது. அரசியலமைப்பு சபையால் சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு வழக்கறிஞர் சங்கத்திற்கு அழைக்கப்பட்ட பிரீத்தி பத்மன் சூரசேன, பின்னர் சட்டமா அதிபர் துறையில் இணைந்து,

தொடர்ச்சி P2

## சிவில் பாதுகாப்பு அதிகாரிகள்

# 10,000 பேரை இணைக்கத் திட்டம்

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் சுமார் 10 ஆயிரம் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களையும் மையப்படுத்தி சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

நாட்டிற்குள் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை தடுப்பதனூடாக போதைப்பொருள் பாவனையை குறைக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் இரவு மற்றும் அதிகாலை வேளையில் சுற்றிவளைப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.



# சினை மானைக் கொன்ற நால்வருக்கு சிக்கல்

கலேவெல, மகுளுகஸ்வெவ, ஹீனுகல வனப்பகுதியில் சினை மான் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர்களை இம்மாதம் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க தம்புள்ளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பிள்ளையானின் அலுவலகத்தில் சோதனை

■ பாறுக் ஷிஹான்

யுத்தம் நிலவிய காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இருந்து 2004ஆம் ஆண்டு பிரிந்து சென்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரீ.எம்.வி.பி.) அமைப்பு என கருணா அம்மான் எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் மற்றும் அதன் முக்கியஸ்தராக செயற்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் பலர் செயற்பட்டிருந்தனர்.

இதில், அம்பாறை மாவட்டத்தில் அக்கால கட்டத்தில் பொறுப்பாளராக செயற்பட்ட இனிய பாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## புதிய கல்விச் சீர்திருத்தம்

# “ஒட்டுமொத்த முறைமையும் மாற்றி அமைப்பதாகும்”

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கல்வியைப் பற்றிப் பெருமளவில் பேசியபோதிலும், கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளை இனங்கண்டபோதிலும், அவர்கள் முன்னெடுத்து வந்த அரசியல் கலாச்சாரத்தினால் கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. பெரும்பாலும் அவர்கள் கல்வியையும் தமது அரசியல் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர் என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் ‘தேசியப் பாடசாலை’ என பெயர் பலகையை மாத்திரம் மாற்றிய எத்தனை பாடசாலைகள் இருக்கின்றன? கல்வியின் தரத்திற்கு எத்தகைய நிலைமை ஏற்பட்டபோதிலும், தமது பெயரால் கட்டிடத்தைத் திறந்து வைப்பது போன்ற கண்காட்சி அரசியலுக்காகத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திய இந்த அரசியல்வாதிகள், தமது அரசியலுக்காகக் கல்வியை பயன்படுத்தி அத்துறைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று பிரதமர் கண்டனம் தெரிவித்தார்.

அதேபோன்று, கடந்தகால அரசாங்கங்கள் வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டைப் படிப்படியாகக் குறைத்து, கல்வியின் சுமையை பெற்றோர் மீது சுமத்தின. கல்வித்துறைக்கு மிகவும் முக்கியமான அம்சமாக விளங்கும் ஆசிரியர் உள்ளிட்ட கல்வித்துறை நிர்வாக சேவையில் கடமையாற்ற வேண்டியவர்களின் தொழில்சார் வளர்ச்சியை ஏற்படுத்தி மனிதவளத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக, அந்த மனித வளத்திற்குப் பாதகங்களை விளைவிக்கும் துறைகளை வளர்ச்சி அடையச் செய்தார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்விச் சீர்திருத்தம் பற்றி கடந்த அரசாங்கங்கள் கலந்துரையாடியிருந்தபோதிலும், அவ்வாறு கலந்துரையாடுகின்ற அதேவேளையில், கல்வி முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மனிதவளங்கள், அடிப்படை வசதிகள், முதலீடுகள் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. அவ்வாறு மறுசீரமைப்புக்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாவிட்டால், இத்தகைய கல்விச் சீர்திருத்தங்களில் தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்துவது கடினம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஆயினும், நாம் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு சமூகத்தினுள் இதைப் பற்றிய ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி, தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, சமூகத்தில் ஏற்பட வேண்டிய கருத்து மாற்றம் உள்ளிட்ட அனைத்து விடயங்களைப் பற்றியும் கவனம் செலுத்தி, இக்கலந்துரையாடல்களில் அவற்றை உள்வாங்கி உண்மையான ஒரு சமூக மாற்றத்திற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆகையினால், இது பற்றிய பரந்த சமூகக் கலந்துரையாடலை ஏற்படுத்தும் பொறுப்பு உங்களையே சாரும் என பிரதமர் அங்கு குழுமியிருந்தவர்களை வலியுறுத்தினார்.

அந்த வகையில், கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு நாடாக எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வதற்கும், அதனுள் ஒழுக்கமான ஒரு சமூகத்தை ஏற்படுத்துவதற்கும், உலக நாடுகளுடன் தோளோடு தோள் நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் முன்னெடுத்துச் செல்லும் இந்தக் சமூகக் கலந்துரையாடல்களின் செய்தியை சமூகமயப்படுத்தும் செய்தியாளர்களாகச் செயல்பட முன்வருமாறு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இக்கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி நிலுஷா லக் மாலி, இரத்தினபுரி நகர மேயர் இந்திரஜித் கட்டுகம்பொல மற்றும் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டத்தின் நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றின் மக்கள் பிரதிநிதிகளினதும், இரத்தினபுரி மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் பெருமளவு செயற்பாட்டாளர்களினதும் பங்கேற்பில் இடம்பெற்றது.

# 101 என்பு தொகுதிகள் மீட்பு

இதேவேளை, இந்த அகழ்வு நடடிக்கைளில் 46 சாட்சிய ஆதாரப் பொருட்கள் இதுவரை அகழப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், யாழ். செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இரண்டு என நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் சனிக்கிழமை (26) அகழ்வுப் பணிகள் இடம்பெற்றபோது, பொலித்தீன் பை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனுள் எலும்புக் குவியல்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றன. அந்தப் பொலித்தீன் பை முழுமையாக சுத்தப்படுத்தப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டதன் பின்னரே அது பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# NPP யின் அமைப்பாளர் உட்பட 8 பேர் கைது

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸார் தகவல் தருகையில்,

மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலின் மாதா சொரூபத்தை மதுபோதையில் இருந்த 20 பேரடங்கிய கும்பல் ஒன்று உடைத்து சேதப்படுத்தியதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு குறித்த ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்திருந்த நிலையில் பொலிஸார் துரித நடவடிக்கையில் இறங்கியதனடிப்படையில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களின் தகவலின் அடிப்படையில் ஏனையோர் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் என தெரிவித்தனர். அத்துடன், விசாரணைகளை அடுத்து குறித்த நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உள்ளடங்கலாக 20 பேர் அடங்கிய குழுவினர், குறித்த ஆலயத்தின் பகுதியில் இருந்து வெள்ளிக்கிழமை (25) அன்று மது அருந்தியதாகவும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சுற்றுலாவுக்காக வருகைதந்த சுற்றுலாப் பயணிகளுடன் தகாத வார்த்தைகளால் நக்கல் கதைகள் கூறி முரண்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில், கடும் மதுபோதையில் இருந்த குறித்த குழுவினர் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 50 இலட்சம் பெறுமதியான மாதா சொரூபத்தை அடித்து முழுமையாக உடைத்து சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கிறிஸ்தவ ஆலயத்தின் சொரூபத்தை இதையடுத்து குறித்த ஆலய நிர்வாகத்தினர் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். இந்து சமயத்தை சேர்ந்த தரப்பினர் உடைத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்த நிலையில் பொலிஸார் நிலைமையைக் கருத்தில் கொண்டு துரித நடவடிக்கையில் ஈடுபட்டதன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# புதிய பிரதம நீதியரசர் பதவியேற்றார்

அரசு வழக்கறிஞராக பணியாற்றினார். 2007ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

2016ஆம் ஆண்டு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார், 2018ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகவும், 2019ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராகவும் நியமிக்கப்பட்டார். அப்போதிருந்து, பிரீத்தி பத்மன் சூரசேன உயர் நீதிமன்ற நீதியரசராக பணியாற்றி வருகிறார்.

# நீதி கோரி போராட்டம்

நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம் செம்மணி வளைவுப் பகுதியில் சனிக்கிழமை (26) அன்று போராட்டமொன்று வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்குப் பன்னாட்டு சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடாக மட்டும் நீதியை வேண்டி நிற்பதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.




# சினை மானைக் கொன்ற நால்வருக்கு சிக்கல்

சம்பவம் தொடர்பாக இரண்டு பொலிஸ் சார்ஜென்ட்கள் மற்றும் இரண்டு பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை தம்புள்ளை நீதிவான் நீதிமன்றத்தில் சனிக்கிழமை (26) ஆஜர்படுத்திய பின்னர் தம்புள்ளை நீதிவான் துலாஞ்சலி சித்துமினி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இருப்பினும், சந்தேக நபர்களில் ஒருவரின் உடல்நிலை சரியில்லாமல் தம்புள்ளை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதவானிடம் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பிணி மானைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட 03 துப்பாக்கிகளை தம்புள்ளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஒரு மானைக் கொன்றதாகவும், துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும் இரண்டு பொதுமக்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது, அதே நேரத்தில் சந்தேகிக்கப்படும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீதும் சினை மானைக் கொல்ல உதவியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கு தமிழர்களை

# புலம்பெயர வேண்டாமென கேட்கும் துணிச்சல் இருக்கிறதா?

வெளிநாடுகளுக்குத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து கொண்டிருப்பதால் வடக்கு மாகாணம் இலங்கையில் சனத்தொகையில் மிகவும் குறைந்த மாகாணமாகி விட்டது. அடுத்தடுத்த தேர்தல்களில் வடக்கில் வாக்காளர்களின் தொகை மேலும் குறைவடையும் ஆபத்து இருக்கிறது என்று எச்சரித்திருக்கும் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று உரத்துக்குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் புலம்பெயர வேண்டாம் என்று கேட்கும் துணிச்சல் இருக்கிறதா? என்று கேள்வியெழுப்பினார்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) யாழ். நகர் தந்தை செல்வா கலையரங்கத்தில் சனிக்கிழமை (26) ஏற்பாடு செய்திருந்த கறுப்பு ஜூலை வெலிக்கடைச்சிறை தமிழ்க் கைதிகள் படுகொலை நினைவேந்தல் - தமிழ்த் தேசிய வீரர்கள் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் சொந்த மண்ணில் வாழ்ந்தால் தங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய அரசியல் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் இனிமேலாவது கடைப்பிடித்து தமிழ் அரசியல்வாதிகள் கற்பனாவாத சுலோகங்களை விடுத்து நடைமுறைச் சாத்தியமான பாதையைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரெலோ இயக்கத்தின் பேச்சாளர் சுரேன் குருசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தனபாலசிங்கம் மேலும் பேசியதாவது,

வெறுமனே தேசியவாத சுலோகங்களை எழுப்புவதன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையை தமிழ் அரசியல்வாதிகளினால் இனிமேலும் வென்றெடுக்க முடியாது. உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங்களாகத் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகளில் வெறுப்படைந்த காரணத்தினாலேயே தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவில் வாக்களித்தார்கள்.

தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களித்ததன் உண்மையான காரணத்தைப் புரிந்து கொண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவும் அவரது அரசாங்கமும் அக்கறை காட்டியிருந்தால் உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க் கட்சிகளினால் மீண்டும் அவற்றின் செல்வாக்கை அதிகரிக்க முடியாமல் போயிருக்கும் என்றார்.

# பிள்ளையானின் அலுவலகத்தில் சோதனை

உறுப்பினர் கே.புஷ்பகுமார் பயன்படுத்திய அலுவலகங்கள் மற்றும் முகாம்கள் இன்று பயங்கரவாத புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவு அணியினர் சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் குற்றப் புலனாய்வு பிரிவினரினால் ஏலவே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் வெள்ளை நிற ஆடை அணிந்து அவ்விடத்திற்கு இரண்டு வெவ்வேறு ஜீப் வண்டிகளில் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அந்நபர்கள் இனங்காட்டிய அமையக் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகம் மற்றும் பிரதான முகாமாக செயற்பட்ட கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தாளவெட்டுவான் சந்திக்கு அருகாமையில் உள்ள பாரிய வீடு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அழைத்து வரப்பட்ட சந்தேக நபர்களுடன் நீண்ட நேரமாகக் குறித்த வீட்டில் தரித்து நின்ற புலனாய்வு பிரிவினர் சோதனை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து அவர்கள் வெளியேறிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது குறித்த வீட்டின் முன்பகுதி உணவகம் ஒன்றிற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு கல்முனை வேப்பயடி மத்தியமுகாம் சொறிக்கல்முனை சம்மாந்துறை சேனைக்குடியிருப்பு அக்கரைப்பற்று திருக்கோவில் விநாயக பரம் காரைதீவு 40 ஆம் கட்டை தம்பட்டை பொத்துவில் கோமாரி காஞ்சினங்குடா ஊரணி கஞ்சிக்குடிச்சாறு என பல முகாம்களும் அலுவலகங்களும் செயற்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# உயர் தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

2023/ 2024 ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் பரீட்சையில் சிறப்பு சித்தியைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தினூடாக பணப் பரிசில்களையும் கௌரவத்தையும் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன ஞாயிற்றுக்கிழமை (27) அன்று வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் எஸ்.சி.ரோஷன் தலைமையில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்றது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வழிகாட்டுதலின்கீழ் ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பரவலாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு 36 மில்லியன் ரூபாய் பணப் பரிசில்களும் மற்றும் கௌரவம் வழங்கப்பட்டன.



## மக்கள் எதிர்ப்பு மத்தியில்

# மண் விநியோகம்

■ பு.கஜிந்தன்

அம்பன் கிழக்கில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தீர்மானத்தை மீறி பொலிஸ் பாதுகாப்புடன் நல்லூர் ஆலயத்திற்கு மணல் விநியோகம் சனிக்கிழமை (26) அன்று இடம்பெற்றுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்காக வருடம் தோறும் குறிப்பிட்ட மணல் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இருந்து பிரதேச மக்களின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வந்தது. வருடாந்தம் வழங்கப்படும் மணல் திருவிழா நிறைவடைந்ததும் விற்பனை செய்யப்படுவதை அறிந்து, குறைந்தது அம்பன் கிழக்கில் பத்து இலட்சம் கியூப் மணல் அகழப்பட்டு சூழல் சமநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் தமது கிராமத்தைத் தொடர்ந்து அழிவிற்கு உட்படுத்தக் கூடாது என்பதன் அடிப்படையிலும், இம்முறை மணல் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மணல் வழங்க மறுத்திருந்தனர். அதேவேளை, தொடர்ச்சியாக அம்பன் கிழக்கில் மட்டும் அகழக் கூடாது என்று தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பிரதேச மக்களின் எதிர்ப்பு மத்தியிலும் பொலிஸ் பாதுகாப்புடன் மண் விநியோகம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கு அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் தனது கிராமத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ள வேண்டாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மீறி தனி நபர் ஒருவரது பெயரில் கனிய வளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்களத்தின் அனுமதியினை பெற்ற வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் தனி நபர்கள் எவருக்கும் கனிய மணல் அகழ்விற்கு அனுமதி வழங்கக் கூடாது என ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், அதனையும் மீறித் தனி நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மணல் அகழ்விற்கு சகாதேவன் அனுமதி கோரப்பட்டிருந்தது. தனி நபர் ஒருவருக்கு வழங்க முடியாதெனப் பிரதேச செயலகம் அறிவித்திருந்தது. அதை எதிர்த்து சகாதேவனால் உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்திருந்த நிலையில் இது தொடர்பாக பிரதேச செயலகத்தால் ஒருங்கிணைப்புக் குழு தீர்மானத்தின் பிரகாரம் தனிநபர் எவருக்கும் மணல் அகழ அனுமதி வழங்கக்கூடாது என மன்றிற்கு அறிவித்திருந்தது.

இந்நிலையில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தால் தனி நபர் ஒருவருக்குக் கனிய மணல் அகழ்விற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பெருந்தொகையான கேரள கஞ்சா மீட்பு




யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வத்திராயன் உதயசூரியன் மைதானத்தின் அருகாமையில் வெள்ளிக்கிழமை (25) இரவு 10 மணியளவில் பெருந்தொகையான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையினருக்கு மற்றும் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மருதங்கேணி பொலிஸாரால் ஓர் விசேட சுற்றிவளைப்பு ஒன்றை வத்திராயன் பகுதி முழுவதும் வெள்ளிக்கிழமை (25) அன்று மேற்கொள்ளப்பட்டது

இச் சுற்றி வளைப்பில் 34 பொதிகள் அடங்கிய 60.256 kg கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றதோடு கைப்பற்றப்பட்ட போதைப்பொருளையும் சந்தேக நபரையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உயிர் பல்வகைமைக்கு ஆபத்து



யாழில் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தின் சூழல் காரணமாக உயிர் பல்வகைமைக்கு பாரிய ஆபத்து ஏற்படுத்தும் என யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் கணபதி கஜபதி தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புலம்பெயர் பறவைகளான வலசைப் பறவைகள் அரிதாகக் காணப்படுகின்ற சரசாலை குருவிக்காடு, நாகர்கோவில் பகுதி மற்றும் அரியாலைப் பகுதி முறையற்ற கழிவகற்றல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதிகளாகக் காணப்படுகின்றன.

வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன, எரியூட்டப்படுகின்றன இவை அனைத்தும் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும். முறையற்ற கழிவகற்றலினால் சமூகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றன.

கடற்கரை ஓரமாக மற்றும் அடர்ந்த பற்றைகள் உள்ள பிரதேசங்களில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படும் போது, அவற்றை விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுக்காகத் தேடிச் செல்கின்றன. அவற்றை உண்ணும் போதும் விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுத் தொகுதிக்கு ஆபத்தை விளைவிக்கும்.

அண்மையில் நெடுந்தீவு பிரதேசத்தில் குதிரைகள் இறந்து கிடந்த போது அவற்றை ஆய்வு செய்தபோது, அவற்றின் வயிற்றுக்குள் பொலித்தீன் பைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஒரு சூழலில் வாழ்கின்ற மனிதன் மற்றும் உயிரிகளின் இயல்பான வாழ்க்கைக்கு முறையான கழிவகற்றல் பொறிமுறை செயல்படுத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் முறையான கழிவு முகமைத்துவம் பின்பற்றப்படாத நிலையில், கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது எதிர்காலத்தில் பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பேஸ்புக் விருந்து; 21 பேர் கைது

முகநூல் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட போதைப்பொருள் விருந்தை சுற்றி வளைத்து 21 இளைஞர்களை கைது செய்ததாக கடுவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கடுவெல, வெலிவிட்ட பகுதியில் வைத்து இந்தக் குழு கைது செய்யப்பட்டுள்ளது.

இதன்போது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 15 சிகரெட்டுகள், பீல் என்ற போதை குளிசைகள் 07 மற்றும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் பிற சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 22 - 27 வயதுக்குட்பட்டவர்கள் என கடுவெல பொலிஸார் கூறியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# விபத்தில் இருவர் காயம்



■ செ.தி.பெருமாள்

வாசனை திரவியங்கள் மற்றும் சவர்க்கார பொருட்கள் ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டியொன்று கொட்டகலை - ஹட்டன் பிரதான வீதியின் கிரிஸ்லஸ் பாம் பகுதியில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் முச்சக்கர வண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீ பரவலால் வீடு முற்றாக நாசம்

■ ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் நடுப்பிரப்பந் திடல் கிண்ணியா - தம்பலகாமம் பிரதான வீதி அருகில் உள்ள வீடொன்று சனிக்கிழமை (26) அன்று அதிகாலை 2.00 மணியளவில் தீப்பற்றி எரிந்ததில் முற்றாக நாசமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த வீட்டின் உரிமையாளர் குவைத் நாட்டில் இருந்து நாடு திரும்பவுள்ள நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இரவு 10.30 மணிக்கு தாய் மற்றும் இரு பிள்ளைகளுடன் புறப்பட்டுள்ளனர். ஒரே காணிக்குள் உள்ள மற்றொரு வீட்டில் உரிமையாளரின் தாயும் இன்னொரு மகளும் தூங்கிக் கொண்டிருந்த நிலையில் புகை வாசனை ஒரு வகை சத்தம் ஏற்பட்டதை அடுத்து சோதித்து பார்க்கும் போது பக்கத்து வீட்டில் தீ பரவல் ஏற்பட்டது தெரியவந்துள்ளது.

பின்னர் இது தொடர்பாக குறித்த வீட்டாருக்கு அறிவிக்கப்பட்டு திருகோணமலை மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவுக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைக்கும் பிரிவினர் விரைந்து செயற்பட்டதாக தெரியவருகிறது.




வீட்டில் உள்ள மின் சாதனப் பொருட்களான தொலைக்காட்சி பெட்டி,குளிர்சாதன பெட்டி உள்ளிட்ட பல தளபாடங்கள் என பல இலட்சக்கணக்கு பெறுமதியான பொருட்கள் முற்றாக நாசமடைந்து எரிந்து சாம்பலாகியதாக தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் இலங்கை மின்சார சபையினர் வந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# உடுப்புத் துவைத்தவர் திடீர் மரணம்

உடுப்புத் துவைத்துக் கொண்டு இருந்தபோது மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுப்ரமணியம் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தாவடியில் உள்ள பாடசாலை ஒன்றில் காவலாளியாகக் கடமையாற்றுவதாகவும் சனிக்கிழமை(26) மதியம் 1.30 மணியளவில் உடுப்பு துவைத்துக் கொண்டிருந்த போது மயங்கி விழுந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

# கல்வி சீர்திருத்தம் பற்றி மீண்டும் பேச்சு

1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதில் இருந்து நாட்டில் ஏராளமான கல்வி சீர்திருத்தங்கள் நடந்திருக்கின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் மீண்டும் ஒரு கல்வி சீர்திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய கல்வி சீர்திருத்தம் எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல் மேற்கொள்ளப்படுகிறது என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய கூறியிருந்தார். இருப்பினும், இந்த சீர்திருத்தம் பற்றிய பேச்சுக்கு எதிராக மிகப்பெரிய அரசியல் எதிர்ப்பு எழுந்துள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தத் திட்டத்தின் உள்ளடக்கத்தை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கண்டித்துள்ளார். சிலர் சொல்வது போல், புதிய முறையின் கீழ் வரலாறு மற்றும் அழகியல் கட்டாயமாக இருக்காது. அந்தப் பேச்சு ஒரு பொய் என ஹரிணி அமரசூரியவின் தெரிவித்துள்ளார். வரலாறு மற்றும் அழகியலைக் குழந்தைகள் நிச்சயமாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

1970 ஆம் ஆண்டு சமகி பெரமுன அரசாங்கத்தின் கீழ், க.பொ.த. சாதாரண தரத் தேர்வுக்கு பத்து பாடங்களைப் படிக்க வேண்டியிருந்தது. இந்த பத்து பாடங்களில் ஒன்று அல்லது இரண்டில் தேர்ச்சி பெறுவது கட்டாயமில்லை. பின்னர், தேர்ச்சி பெறக்கூடாத பாடங்களில் கவனம் செலுத்தாமல், குழந்தைகள் மற்ற பாடங்களை மட்டுமே படித்தனர்.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் அரிதாகவே பாடத்திட்டத்தை உருவாக்குகின்றன. ஆனால் அவர்கள் வருடத்திற்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் பாட மேம்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

1970 முதல் இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த பெரும்பாலான அரசாங்கங்கள் கல்வியை ஓர் அரசியல் மைலேஜாக மட்டுமல்லாமல், அரசியல் பழிவாங்கலுக்கான கருவியாகவும் பயன்படுத்தியுள்ளன. அதன் கதை பின்வருமாறு.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம் பண்டாரநாயக்கவைப் பழிவாங்க புதிய கல்வி முறையை மாற்றி, பழைய முறைக்குத் திரும்பியது. சந்திரிகா ஆட்சிக்கு வந்த பிறகு இந்த முறை மீண்டும் மாறியது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பிறகு இந்த முறை மாறவில்லை என்றாலும், நாட்டின் கல்வியின் ஆற்றலின் ஒரு பகுதி மறைந்துவிட்டது. இதற்குக் காரணம், 1977 க்குப் பிறகு இலங்கையின் கல்வியை ஆக்கிரமித்த கல்வி ஆசிரியர் சமூகம் மஹிந்தவின் காலத்தில் பெரிதாக வளர்ந்திருந்தது.

மைத்திரிபால சிறிசேன அல்லது கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் பாடசாலை பாடங்களில் எந்த வளர்ச்சியும் இல்லை. இதற்குக் காரணம், பாடசாலை படிப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, இருவரும் தங்கள் கழுத்தைக் காப்பாற்றப் போராட வேண்டியிருந்தது.

நீண்ட காலத்திற்குப் பிறகுதான் ஜே.வி.பி - என்.பி.பி. அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பு செய்துள்ளது. இது ஒரு பயனுள்ள நடவடிக்கை என்றால், நாங்கள் அதை வரவேற்கின்றோம்.

நவீன உலகிற்கு ஏற்றவகையில் கல்வியில் சீர்திருத்தம் செய்யவேண்டும். இல்லையேல் உலக தொழில் துறைகளுடன் போட்டியிடமுடியாது. எனினும், பாடசாலை நேரத்தை அதிகரித்தமைக்கு கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கின்றனர். மேலதிக நேரத்துக்குத் தேவையான சாப்பாட்டையும் போக்குவரத்தையும் ஏற்படுத்தித் தரமுடியுமா? என வினவியுள்ளனர். ஆனால், மேலதிக வகுப்புகளை நடத்தும்போது, ஆசிரியர்கள் பலரும் இவற்றை மறந்துவிடுகின்றனர்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மறையாத ஜுலைக் கலவர வடு

**லக்ஸ்மன்**

இலங்கையில் இனப் படுகொலைக்கான ஏதுக்கள் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது முதல் காணப்பட்டிருந்ததாகக் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அதற்கான ஆதாரங்களாக சுதந்திரத்துக்குப் பின்னர் நடைபெற்ற 1956 கலவரம், 1983 கறுப்பு ஜுலைக் கலவரம், தொடர்ச்சியாக நடைபெற்ற யுத்த கால வன்முறைகள், படுகொலைகள் மற்றும் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் நடைபெற்ற திட்டமிட்ட குடியேற்றங்கள் போன்ற ஆதாரங்கள் பட்டியலிடப்படுகின்றன.

தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட திட்டமிடப்பட்ட இனப்படுகொலையின் வரலாற்றுப் பூர்வ சாட்சிகள் காணப்பட்டாலும் அவற்றினை எந்தவித பொறுப்புக்கூறலுமின்றி, கடந்து செல்கின்ற நிலைப்பாட்டினையே இலங்கை நாட்டின் அரசாங்கங்கள் கொண்டிருக்கின்றன. இதில் மாற்றத்தினை ஏற்படுத்திவிடலாம் என்று தமிழர் தரப்பு மேற்கொள்ளாத முயற்சியில்லை எனும் அளவிற்கான முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், ஆயுத யுத்தம் ஓய்ந்து 16 வருடங்களாகியும் அதற்கான வாய்ப்புக்கள் எதுவும் கனிந்ததாக இல்லை. இதற்கு புதிதாக அமைந்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விதிவிலக்கானதல்ல என்பதே காலம் உணர்த்தும் உண்மை.

1983 ஜுலையில், யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடைபெற்ற இராணுவத்தினர் மீதான தாக்குதலையடுத்து கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் ஆரம்பித்து நாடு பூராகவும் பரவி பெரும் கொடுமையை நடத்திமுடித்த கலவரமானது வெறுமனே கடந்து போகக்கூடிய ஒன்றல்ல. அத்துடன், இந்தக் கலவரமானது தன்னிச்சையாக ஏற்பட்ட ஒரு கலவரம் அல்ல, மாறாக சிங்களப் பேரினவாத, அரசின் ஊக்குவிப்புடனேயே இனவெறியால் தூண்டப்பட்ட ஒரு இனப்படுகொலையாகவே பார்க்கவேண்டும் என்பது பலருடைய கருத்தாக இருந்தாலும் இதுவரையில் ஜுலைப் படுகொலைக்கான சரியானதொரு நீதி கிடைக்காமை என்பது கவலையானது எனலாம்.

1983 ஜுலை 24 அன்று, அரசு படைகளின் ஆதரவுடன் சிங்களக் கும்பல்கள் தமிழ் மக்களுக்கு எதிராகத் தீவிரமான தீ வைத்தல், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் கொலை சொத்துக்களைச் சேதப்படுத்தல், கொள்ளையிடுதல் ஆகியவற்றைத் தொடங்கின. அது ஒரு வார காலமும் தொடர்ந்தது. இக் கலவரத்தில், 3,000க்கும் அதிகமான தமிழர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். ஒரு லட்சத்துக்கும் அத்கமானவர்கள் வீடுகளை இழந்தனர். 53 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்டனர். அம்னஸ்டி இன்டர்நேஷனல், ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மேலும் பல மனித உரிமை அமைப்புகள் இக் கலவரம் தொடர்பான ஆவணப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளன. அத்துடன், வெளிநாட்டு ஊடகங்களின் நிருபர்களின் புகைப்படங்கள் மற்றும் நேரடி ஒளிப்பதிவுகள் பல இதற்கான ஆதாரங்களாக உள்ளன.

யூலைக் கலவரக் காலத்தில், அரசுப் படைகள் கலவரத்தினை நடத்திய கும்பல்களை வழிநடத்தின. டெய்லி நியூஸ் போன்ற சிங்கள செய்தித்தாள்கள் தமிழர்களுக்கு எதிரான தூண்டுதலான பிரச்சாரத்தை மேற்கொண்டன. பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள தேசியவாத அமைப்புகள் கலவரங்களில் தீவிர பங்கு வகித்தன என்பவையெல்லாம் குற்றச்சாட்டுக்களாக இருக்கின்றன. இருந்தாலும் அதற்கான தண்டனையளிப்புகள், விசாரணைகள் போன்ற பலனைத் தரவில்லை என்பதே உண்மையாகும்.

இந்தக் கலவரமானது முழு தமிழ் மக்களையும் பயமுறுத்தவும் அழிக்கவும் என மேற்கொள்ளப்பட்ட 42 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. இருந்தாலும், அதன் பிறகும், கறுப்பு ஜுலையின் வலி தமிழ் மக்களுடைய மனங்களிலிருந்து நீங்காதிருப்பதானது அக் கலவரத்தின் கொடூரத்தையே காட்டிநிற்கிறது. இக் கலவரம் குறித்து கருத்துப் பகர்கின்ற ஆய்வாளர்கள் இது வரலாற்றின் ஒரு இருண்ட அத்தியாயம் மட்டுமல்ல - இது முறையான அநீதிக்கு ஒரு உயிரோட்டமான சான்று மற்றும் நீடித்த பொறுப்புக்கூறலைக் கோரும் ஒரு அழைப்பு என்று குறிப்பிடுகின்றனர்.

கலவரங்களும், படுகொலைகளும் இனப்படுகொலையினை அடிப்படையாகக் கொண்டவை என்ற அடிப்படையில், 1948இல் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல், இலங்கை அரசு சட்டரீதியான மற்றும் கட்டமைப்பு ஒடுக்குமுறை மூலம் தமிழர்களை இலக்காக்கத் தொடங்கியது என்று பலரும் கருத்துப் பகர்வதுண்டு. இதற்கான அரசியல் நடவடிக்கை 1948ல் உருவாக்கப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம் மூலமாக இந்தியத் தமிழர்களின் குடியுரிமையை பறித்ததில் இருந்து தொடங்கியது.

அதேநேரம், 1956, சிங்கள மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு சிங்களத்தை ஒரே அதிகாரப்பூர்வ மொழியாக இலங்கை அரசு அறிவித்தது. அத்துடன், 1972 குடியரசு யாப்பில் பௌத்தம் இலங்கை அரசாங்கத்தின் பிரதான மதமாக அறிவிக்கப்பட்டது. இவற்றினை அரசியலமைப்பு ரீதியான செயற்பாடுகளாகச் சொல்லலாம். அதே நேரத்தில், தமிழர்களுக்கு எதிரான வன்முறை, கலவரங்கள் மற்றும் பொருளாதார ஒடுக்குமுறை 1977 தொடக்கம் 1983 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக சிந்திக்கத் தூண்டியது என்றே கூறலாம். அத்துடன் தமிழர்களை அடக்குவதற்கென்றே கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் குறிப்பிடப்பட வேண்டும்.

சுதந்திர இலங்கையின் தொடக்க காலம் அகிம்சைப் போராட்டமாக இருந்த போதிலும், இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இலங்கை அரசின் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் காரணமாகத் தமிழர்கள் அமைதியான ஜனநாயகப் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். அவை அரசினதும் பேரினவாதிகளாலும் வன்முறைகளால் நசுக்கப்பட்டன. அதுவே ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது எனலாம்.

பேரினவாதத் தரப்பின் வன்முறைகள் காரணமாகவும், ஒடுக்குமுறைகள் காரணமாகவும், நெருக்குதல்கள் காரணமாகவும் படிப்படியாகத் தமிழ் மக்களின் உளவியலில் ஏற்பட்ட மாற்றம் அவர்களையும் வன்முறைகளில் ஈடுபடத் தூண்டியதன் வெளிப்பாடு கொடுமைகளையே கொண்டுவந்தது. ஆனால் தீர்வின்றியே அப்பயணம் தொடர்கிறது என்பது மாத்திரம் கவலைக்குரியது.

இவ்வளவையும் கடந்த பின்னரும் அமைதியான சர்வதேசத்தின் பதில் இவற்றின் மீதான செயலற்ற தன்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றன. அரசாங்கத்தின் சமாளிப்புகளையும் இராஜதந்திரத்தையும் நம்புகின்ற நிலைமை மோசமானதாகும்.

மிக மோசமான இனக் கலவரம், இனப்படுகொலை இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் நடந்து முடிந்து தமிழ் மக்கள் நீதியைக் கோருகின்ற போது ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகம் போன்றவை இந்த இனப்படுகொலைகளைக் குற்றங்களாக அங்கீகரிக்கத் தவறி வருவது ஒரு உரிமை மீறலாகவே பார்க்கப்படவேண்டும். இருந்தாலும் இலங்கை அரசாங்கத்தின் காலங்கடத்தல்களையும், தட்டிக்கழித்தல்களையும் நம்பி ஏமாறுவது சர்வதேச நீதி சார் அமைப்புக்களுக்கு ஏற்றதா என்பது இந்த இடத்தில் கேள்விதான்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது முதல் திம்பு பேச்சுமூலம் உள்ளே நுழைந்த இந்தியா, மாகாண சபை முறைமையை ஏற்படுத்தியதைத் தவிர, தமிழர்களைப் பாதுகாக்க எந்த தீவிர நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இப்போது குற்றச்சாட்டாக வரத் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையில், இப்போது தமிழ் அரசியல் தரப்பினர் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என ஒற்றைக்காலில் நிற்பதில் எந்தப் பயனுமில்லை என்பதே வெளிப்படை.

அந்தவகையில்தான், தமிழ் மக்களின் சுதந்திர உணர்வை அழிக்க இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளால் மேற்கொள்ளப்பட்ட கறுப்பு ஜுலை கலவரம் தமிழர்களை ஒரு ஒருமிப்புக்கு கொண்டுவந்திருந்தது. வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் முன்னெப்போதையும் விட அதிக எண்ணிக்கையில் ஒன்றுபட்டிருந்தனர். ஆனால், இப்போதும் அது தொடரவேண்டும் என்று எதிர்பார்க்கவேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பு.

இப்போதும் தமிழர் தங்களுடைய உரிமைகளை அடைந்து கொள்வதற்காக அரசுக்கெதிரான போராட்டங்கள், கவனஈர்ப்புகள், சர்வதேச எதிர்ப்புப் போராட்டங்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் என நடத்திக் கொண்டே காலங்கடத்துவதைத் தவிர வேறில்லை என்றாகிப் போயிருக்கிறது.

தமிழ்த் தேசிய உணர்வு வலிமையானது, உறுதியானது மற்றும் உலகளவில் இணைக்கப்பட்டது என்றெல்லாம் பிரச்சாரப்படுத்திக் கொண்டு அநீதிக்கெதிரான போராட்டத்தைத் தொடர்கிறோம் என்று கொக்கரிப்பதில் என்ன பயன் கிடைத்துவிடப்போகிறது என்ற கவலையே பலருக்குத் தொற்றியிருக்கிறது.

கறுப்பு ஜுலை ஒரு நினைவை மட்டும் மீட்டுக் கொண்டு முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவுபடுத்திக் கொண்டு, படுகொலை நாட்களை நினைவுகூர்ந்து கொண்டு நகர்வதால் எத்தனை தலைமுறைகளைத் தமிழர்கள் அழித்துவிடப் போகிறார்களா என்பதுதான் இன்னமும் கேள்வியாக இருக்கிறது.

இருந்தாலும், தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைக்கான அங்கீகாரம் மற்றும் நீதிக்கான கோரிக்கைக்கான தீர்ப்பு நான்கு தசாப்தங்களுக்குப் பிறகும், வெறும் கோரிக்கைகளாகத்தான் இருந்து வருகின்றன என்றால் இது யாருடைய தவறு என்று ஆராய வேண்டும். இந்த ஆராய்தலைத் தமிழர்கள் செய்தல் வேண்டும்.

ஆனால், கறுப்பு ஜுலை இனப்படுகொலை என்பதை சர்வதேச சமூகம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட, கண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற தமிழர்கள் ஜுலை கலவரத்தின் வடுவையேனும் மறப்பார்களா என்பதுதான் நிலைமை.



## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஈ ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

திருகோணமலை மாவட்டத்தில் விசர் நாய்க்கடி தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் ஏ.ஆர்.வி. என்று அழைக்கப்படும் விசர் நாய் கடிக்கான தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.


திருகோணமலை பொது வைத்தியசாலை, கிண்ணியா தள வைத்தியசாலை, மூதூர் தள வைத்தியசாலை மற்றும் கந்தளாய் தள வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் தடுப்பூசி இல்லையெனவும் வைத்தியசாலையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் நாய் கடிக்கு இலக்கான நிலையில் வருகை தருவதாகவும் இந்நிலையில் குச்சவெளி, றொட்டவெவ, புல்மோட்டை. சம்பூர், வெருகல், சேருவில போன்ற தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையை நம்பி வருகை தந்து மீண்டும் தடுப்பூசி ஏற்ற முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

– எஸ்.கீதபொன்கலன்

## இளைய தலைமுறையை வழிகாட்ட வேண்டிய

# நேரம் இது





அ.தீபக்ராஜ்,
கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

> இன்றைய இளம் தலைமுறையினர் நாளைய தலைவர்கள். இவர்களுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம், அவர்கள் தங்கள் முழு திறனையும் உணர்ந்து, எதிர்கால உலகை சிறப்பாக வடிவமைப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் நம் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களைப் புரிந்துகொண்டு, ஆதரவளித்து, நம்பிக்கையூட்டி, சரியான திசையில் வழிநடத்துவதன் மூலம், வலுவான, பொறுப்புள்ள, தொலைநோக்குடைய ஒரு தலைமுறையை நாம் உருவாக்க முடியும். இது ஒரு சவாலான பணிதான், ஆனால் இது நம் பொற்கால எதிர்காலத்திற்கு அத்தியாவசியமான முதலீடு

உலகம் மின்னல் வேகத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. தொழில்நுட்பப் புரட்சி, சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம், தங்குதடையற்ற தகவல் பரிமாற்றம் எனப் பல அலைகள் நம்மைச் சூழ்ந்துள்ளன. இந்த மாற்றத்தின் பேரலையில் மிதந்து வருபவர்கள் இளைய தலைமுறையினர். இவர்களை 'டிஜிட்டல் குடிமக்கள்' என்று அழைக்கலாம். ஸ்மார்ட்போன்களும், இணையமும் இவர்களின் அன்றாட வாழ்வின் சுவாசம். அவர்களின் சிந்தனை முறைகள், பழக்கவழக்கங்கள், கனவுகள் என அனைத்தும் முந்தைய தலைமுறையினரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றன. இந்த அபாரமான மாற்றத்தை நாம் புரிந்துகொண்டு, அவர்களைச் சரியான திசையில் வழிநடத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். இது நம் எதிர்காலத்திற்கு நாம் செய்யக்கூடிய மிக முக்கியமான முதலீடு.

### மாறிவரும் உலகமும், மாறும் மனநிலைகளும்:

ஒரு புதிய யுகத்தின் குழந்தைகள் இன்றைய இளைய தலைமுறை ஒரு தகவல் வெள்ளத்தில் நீந்துகிறது. நொடிக்கு நொடி கோடிக்கணக்கான தகவல்கள் இணையத்தில் பரிமாறப்படுகின்றன. இது ஒருபுறம் அறிவின் சாளரங்களைத் திறந்தாலும், மறுபுறம் கவனச் சிதறல்களையும், தவறான தகவல்களில் சிக்கிக்கொள்ளும் ஆபத்தையும் உருவாக்குகிறது. சமூக வலைத்தளங்கள் இவர்களின் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டன. அங்கு கிடைக்கும் அங்கீகாரமும், பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கும் பல சமயங்களில் மன அழு த்தத்தையும், தனிமையையும் உண்டா க்குகின்றன. காலநிலை மாற்றம், சமூக நீதி, சம த்துவம் போன்ற உலகளாவிய பிரச்சினைகள் குறித்து இவர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். ஆனால், இந்த விழிப்புணர்வை வெறும் உரையாடலாக அல்லாமல், ஆக்கப்பூர்வமான செயல்களாக மாற்ற அவர்களுக்கு வலுவான வழிகாட்டுதல் தேவை.

### சவால்களும் வாய்ப்புகளும்: ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

இந்தத் தலைமுறை பல சவால்களையும் எதிர்கொள்கிறது. போட்டி மிகுந்த கல்விச் சூழல், அதிகரித்து வரும் வேலையி ன்மை, மனநலப் பிரச்சினைகள், இணைய உலகில் மறைந்திருக்கும் ஆபத்துகள் போன்றவை இவர்களின் எதிர்காலத்தைக் குறித்த அச்சத்தை உருவாக்குகின்றன. ஆனால், இந்த சவால்களுக்கு அப்பால், அபரிமிதமான வாய்ப்புகளும் கொ ட்டிக் கிடக்கின்றன. இணையத்தின் மூலம் உலக அறிவைத் தேடும் ஆர்வம், புதிய தொழில்நுட்பங்களை எளிதில் கற்றுக்கொள்ளும் திறன், புதுமையான சிந்தனைகள், உலகளாவிய தொடர்புகளை உருவாக்கும் வாய்ப்புகள் எனப் பல நேர்மறையான அம்சங்கள் இவர்களிடம் கொழுந்துவிட்டு எரிகின்றன. இந்த வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள நாம் அவர்களுக்குப் பாலமாக அமைய வேண்டும்.

### பெற்றோரின் பங்கு: வழிகாட்டியாக இருங்கள், தடையாக அல்ல

பெற்றோர்கள் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டுவதில் மிக முக்கியமான பொறுப்பைக் கொண்டுள்ளனர். எங்கள் காலத்தில் இப்படி இல்லை" என்ற ஒப்பீடுகளைத் தவிர்த்துவிட்டு, இவர்களின் உலகைப் புரிந்துகொள்ள நாம் திறந்த மனதுடன் அணுக வேண்டும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை முழுவதுமாகத் தடை செய்வதற்குப் பதிலாக, அதன் சரியான பயன்பாடு குறித்து அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். அவர்களுடன் தோழமையுடன் உரையாடுவது, அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது, தவறு செய்யும்போது ஆதரவாக நிற்பது ஆகியவை உறவை வலுப்படுத்தும். கண்டிப்பைத் தாண்டி, அன்புடனும், வழிகாட்டுதலுடனும் செயல்படுவது குழந்தைகளின் நம்பிக்கையைப் பெறும். குழந்தைகள் தங்கள் கனவுகளைத் துரத்த ஊக்குவிப்பதும், தோல்விகளைக் கண்டு மனம் தளராமல் இருக்கத் துணை நிற்பதும் பெற்றோரின் அசைக்க முடியாத கடமை.

### ஆசிரியர்களின் கடமை: அறிவை மட்டுமல்ல, வாழ்க்கையையும் போதிப்போம்!


ஆசிரியர்கள் வெறும் பாடப்புத்தக அறிவை போதிப்பவர்கள் மட்டுமல்ல, மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பொறுப்பானவர்கள். இன்றைய சூழலில், மாணவர்களுக்குத் தகவல் தேடும் திறன், விமர்சன சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன், ஒத்துழைப்புடன் செயல்படும் திறன் போன்றவற்றைக் கற்றுக்கொடுப்பது மிக அவசியம். உலக நடப்புகள் குறித்து விவாதிப்பது, சமூகப் பிரச்சினைகளில் அவர்களின் பார்வையை அறிந்து கொள்வது, சுய வெளிப்பாட்டை ஊக்குவிப்பது போன்றவற்றை ஆசிரியர்கள் முன்னெடுக்கலாம். தொழில் வழிகாட்டுதல், மனநல ஆலோசனை போன்ற விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வகுப்பறையை ஒரு திறந்தவெளி விவாதக் களமாக மாற்றி, மாணவர்கள் சுதந்திரமாகச் சிந்திக்கவும், கேள்விகள் கேட்கவும் ஆசிரியர்கள் உற்சாகப்படுத்த வேண்டும்.

### சமூகத்தின் பொறுப்பு: பாதுகாப்பான நாளைய உலகை உருவாக்குவோம்

இளைய தலைமுறையினருக்கு பாதுகாப்பான, ஆதரவான சமூகச் சூழலை உருவாக்குவது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகும். சமுதா யத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதும், அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதும் அவசியம். சமூக வலைத்தளங்களின் பொறுப்பற்ற பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது, இணைய அச்சுறுத்தல்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகளை அரசாங்கமும், சமூக அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டும். இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்கள், தொழி ல் முனைவோர் மே ம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்க வேண்டும். அவர்களைச் சமூகப் பணிகளில் ஈடுபட ஊக்குவிப்பது, தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பது ஆகியவை சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

### ஒரு புதிய தலைமுறைக்கான வழிகாட்டுதல்: நம் எதிர்காலத்தின் நம்பிக்கை!

இன்றைய இளம் தலைமுறையினர் நாளைய தலைவர்கள். இவர்களுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம், அவர்கள் தங்கள் முழு திறனையும் உணர்ந்து, எதிர்கால உலகை சிறப்பாக வடிவமைப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் நம் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களைப் புரிந்துகொண்டு, ஆதரவளித்து, நம்பிக்கையூட்டி, சரியான திசையில் வழிநடத்துவதன் மூலம், வலுவான, பொறுப்புள்ள, தொலைநோக்குடைய ஒரு தலைமுறையை நாம் உருவாக்க முடியும். இது ஒரு சவாலான பணிதான், ஆனால் இது நம் பொற்கால எதிர்காலத்திற்கு அத்தியாவசியமான முதலீடு.




# வாகனங்கள் இறக்குமதி மீண்டும் தடைப்படுமா?



ச.சேகர்

இந்த ஆண்டின் முற்பகுதியில் வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அண்மைய நாட்களில் பலரின் பேசு பொருளாக அமைந்திருக்கும் ஒரு விடயம், நாட்டின் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணி இருப்பு குறைவடைந்து செல்வதால், அல்லது இந்த ஆண்டுக்காக வாகன இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்ட தொகையின் பெருமளவு பகுதி ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுவிட்டு நிலையில், மீண்டும் வாகன இறக்குமதி மட்டுப்படுத்தப்படும் அல்லது அனுமதி மறுக்கப்படும் என்றவாறான ஐயப்பாட்டுடனான கருத்துகள் நிலவுகின்றதை அவதானிக்க முடிகிறது.

உண்மையில் வாகன இறக்குமதி என்பது, நாட்டின் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணியுடன் நேரடியாக தொடர்புபட்டதல்ல என்பதை நாம் ஏற்கனவே பல தடவைகள் விளக்கியுள்ளோம். அதாவது, வாகன இறக்குமதி என்பதும், நாட்டில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் மீதான செலவைப் போன்ற ஒரு விடயமாகும். மேலும் குறிப்பிடுவதானால், நாட்டில் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணி சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருக்கும் நிலையில், ஒரு வருடத்துக்கான நாட்டின் மொத்த இறக்குமதிக்கு தேவையான அந்நியச் செலாவணியின் அளவு சுமார் 20 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாகும். எனவே, இந்த மொத்த இறக்குமதியையும் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணியைக் கொண்டு நிவர்த்தி செய்வது என்பது இயலாத காரியம்.

மாறாக, நாட்டின் ஏற்றுமதியினூடாக கிடைக்கும் அந்நியச் செலாவணி, நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானம் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் அந்நியச் செலாவணி போன்றவற்றிலிருந்து இந்த இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி பெறப்படுகிறது என எளிமையாக கூறலாம்.

வாகன இறக்குமதிக்கான அந்நியச் செலாவணியை நாட்டின் வங்கிக் கட்டமைப்புகள் வழங்குகின்றன. வாகன இறக்குமதியை தடை செய்தால், வங்கிகளில் சேரும் அந்நியச் செலாவணியை அவை தம்வசம் வெறுமனே வைத்திருக்கப் போவதில்லை. மாறாக, வேறேதும் இறக்குமதிக்கான கேள்வி எழும் போது, அவற்றை வங்கிகள் வழங்கும். அந்த சுழற்சி நடைபெற்றால் தான் வங்கிக் கட்டமைப்பு இலாபகரமானதாக இயங்கும். கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் போது, அவற்றுக்கு பதிலாக மாற்று வழிமுறைகளை நாடுவது வழமை. இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகையில், உண்டியல் முறைகள் போன்ற சட்டபூர்வமற்ற முறைகளை மக்கள் நாடுகின்றனர். அதனால், நாட்டின் பொருளாதாரத்துக்கு இழப்பு ஏற்படுகிறது என கூறலாம்.

சரி, கொழும்பு நகரின் பிரதான வீதிகளை எடுத்துக் கொண்டால், அண்மையில் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களை அதிகம் காணக்கிடைக்கிறது. இலங்கை மோட்டார் வாகன பதிவு திணைக்களத்தினால் வாகனப் பதிவு இலக்கத் தகடுகள் இன்னமும் வழங்க ஆரம்பிக்கப்படாத நிலையில், புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களை வித்தியாசமாக அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு வர்ணங்களில், வடிவங்களில் இலக்கத்தகடுகள் அச்சிடப்பட்டு பயணிப்பதனூடாக அது புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனம் என்பதை அனுமானித்துக் கொள்ள முடிகிறது. அதுபோலவே, மின் வாகனங்களின் பாவனையும் வீதிகளில் அதிகரித்துள்ளன. குறிப்பாக மின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சீன நாட்டு தயாரிப்பாக BYD ரக வாகனங்களையும் அதிகம் அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில், ஜூன் மாதம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கைகள் குறித்த தரவுகள் அண்மையில் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்தன. இதில் ஏப்ரல், மே மாதங்களுடன் ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பதிவாகியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஜூன் மாதத்தில் இலங்கையில் மொத்தமாக 22,340 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மே மாதத்தில் இந்தப் பெறுமதி 18,463 ஆக காணப்பட்டது. ஜூன் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த புதிய வாகனங்களில் சுமார் 60 சதவீதமானவை சாதாரண மக்கள் அதிகம் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள்களாக அமைந்துள்ளன. அதில், சுமார் 2,593 ஆனவை மின் மோட்டார் சைக்கிள்களாக அமைந்துள்ளன.

கொழும்பை அண்மித்த பகுதிகளில் அதிகம் காணக்கிடைக்கும் BYD ரக வாகனங்கள் 1,254 ஜூன் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், Dolphin எனப்படும் BYD ரக வாகனத் தெரிவுகளில் சிறிய ரக வாகனங்கள் 154, Atto எனும் தெரிவு வாகனங்கள் 501, Sealion தெரிவில் 502 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதிலிருந்து, பாவனையாளர்கள் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் மீது அதிகம் நாட்டம் காண்பிக்க ஆரம்பித்துள்ளமை புலப்படுகிறது. இந்த நிலையை ஊக்குவிக்கும் வகையில், மின்சார வாகனங்களை சார்ஜ் செய்து கொள்ளக்கூடிய வசதிகளை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு பயனளிப்பதாக அமையும்.

மோட்டார் கார்களை எடுத்துக் கொண்டால், ரீகண்டிஷன் செய்யப்பட்ட ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறிய ரக கார்களான வெகன்-ஆர் ரக கார்கள் ஜூன் மாதத்தில் அதிகளவு பதிவு செய்யப்பட்டுள்ளன. 551 வாகனங்கள் இந்த வகையைச் சேர்ந்ததாக அமைந்துள்ளன. புத்தம் புதிய நிலையில் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை வெறும் 468 மாத்திரமே. எனவே, ஆடம்பர சொகுசு வாகனங்களின் பதிவு என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே ஜூன் மாதத்தில் பதிவாகியிருந்தது.

இவ்வாறிருக்க, இலங்கை மத்திய வங்கியினால் வாகனங்கள் மீது வழங்கப்படும் கடன்கள் தொடர்பில் கடந்த வாரம் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதாவது, வாகனமொன்றை கொள்வனவு செய்கையில் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தொகையின் உச்ச வரம்பு தொடர்பில் இந்த அறிவித்தல் அமைந்திருந்தது.

ஜூன் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை எடுத்துக் கொண்டால், மொத்தமாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்காக கடனாக பெற்றுக் கொண்ட தொகை 54 சதவீதமாகவும், பாவனையாளர்கள் தாம் செலுத்திய தொகை 46 சதவீதமாகவும் அமைந்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இந்த புதிய அறிவித்தலின் பிரகாரம், முச்சக்கர வண்டி கொள்வனவை ஊக்குவிப்பதில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது.

அதாவது, கார்கள் போன்ற வாகனங்கள் கொள்வனவுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் எல்லை வரம்பு வாகனத்தின் மொத்தப் பெறுமதியின் 60 சதவீதமாக உயர்த்தப்பட்டிருந்த நிலையில், முச்சக்கர வண்டிகளுக்கு 50சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்பட்ட கடன் எல்லை வரம்பு 25 சதவீதமாக அமைந்திருந்தது. வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கும் முன்னர், அதாவது 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் முச்சக்கர வண்டி ஒன்றின் விலை சுமார் 6-7 இலட்சம் ரூபாயாக காணப்பட்ட நிலையில், தற்போது முச்சக்கர வண்டி ஒன்றின் விலை 2 மில்லியன் ரூபாயை விட அதிகமானதாக அமைந்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதும், வாகன இறக்குமதி இடைநிறுத்தப்படாது எனும் ஒரு கருத்தையே மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்திருந்தார். தொடர்ந்தும் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் சூழல் காணப்படுகிறது. வாகன இறக்குமதியிலிருந்து கிடைக்கும் வரி வருமானம், நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கியமானது என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

அதனை ஊக்குவிக்கும் வகையில், இந்த வாகனப் பெறுமதி மீதான கடன் எல்லை பெறுமதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. வாகனங்கள் தொடர்ந்து வரும்!.

அமெரிக்கா

# 10 கோடி பேரை தாக்கிய வெப்ப அலை

காலநிலை மாற்றம் என்பது உலகம் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று. இதனால் பனிப்பாறை உருகி கடல் மட்டம் உயர்தல், வெப்ப அலை என பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே காலநிலை மாற்றத்தை சமாளிக்க தேவையான நடவடிக்கை எடுக்க உலக நாடுகளை ஐ.நா.சபை வலியுறுத்துகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ், மைனே உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வருகிறது. குறிப்பாக, வட கரோலினாவில் 113 டிகிரி, வாஷிங்டன் டி.சி.யில் 109 டிகிரி என வெயில் கொளுத்துகிறது.

இதனை தாக்குப் பிடிக்க முடியாமல் அங்குள்ள மக்கள் திணறுகின்றனர். இதனால் சுமார் 10 கோடி பேரை கடுமையான வெப்ப அலை தாக்கும் அபாயம் இருப்பதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



நாளை செவ்வாய்க்கிழமை (29) வரை இந்த வெயில் நீடிக்கும் என்பதால் பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா

### 2ஆம் கட்ட ஆட்குறைப்பு

# 3,850 பேரை வெளியேற்றும் நாசா

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நடவடிக்கையால் பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு செய்யப்பட்டு வருகிறது. நாசாவிலும் ஏற்கெனவே ஒருமுறை ஆட்குறைப்பு செய்யப்பட்டது. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவில் சுமார் 14 ஆயிரம் ஊழியர்கள் பணி செய்து வருகிறார்கள். தற்போது 2வது முறையாக பெரிய அளவில் ஆட்குறைப்பு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதில் 20 சதவீத ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. அதாவது சுமார் 3 ஆயிரத்து 870 பேர் வெளியேற்றப்படுகிறார்கள் என்று கணிக்கப்பட்டு உள்ளது. இந்த மாத தொடக்கத்தில் ட்ரம்ப் நிர்வாகம் குறைந்தது 2 ஆயிரத்து 145 நாசாவின் மூத்த ஊழியர்களை பணிநீக்கம் செய்ய கடிதம் அனுப்பியது. அவர்களில் பெரும்பாலானோர் சிறப்பு திறன்கள் மற்றும் நிர்வாக திறன்களை கொண்டவர்கள்.




இந்த நிலையில், மீண்டும் இரண்டாம் கட்ட ஆட்குறைப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல்கள் வெளியானதால் நாசா ஊழியர்கள் கலக்கத்தில் உள்ளனர். இன்னும் சில நாட்களில் 20 சதவீதம் வரை ஆட்குறைப்பு இருக்கும் என்றும், எண்ணிக்கை வேறுபடலாம் என்றும் செய்திதொடர்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா

### விமானத்தில் தீ பரவல்

# திடீரென தரையிறக்கம்



அமெரிக்காவில் டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று காலை 07.49 மணிக்கு அமெரிக்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் டயர் திடீரென தீப்பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மியாமிக்கு புறப்படவிருந்த இந்த விமானம் புறப்படுவதற்கு முன்பே உடனடியாக நிறுத்தப்பட்டது. விமானம் புறப்படும் கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டு பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

விமானத்தில் மொத்தம் 173 பயணிகள் மற்றும் பணியாளர்கள் இருந்தனர். இந்த சம்பவத்தில் ஒரு பயணிக்கு லேசான காயம் ஏற்பட்டது. சமூக ஊடகங்களில் வெளியான வீடியோவில், விமானத்தில் இருந்து புகை வெளியேறுவதை காண முடிகிறது. அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம், இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.


அதில், அனைத்து பயணிகளும், பணியாளர்களும் பாதுகாப்பாக விமானத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். எங்கள் பராமரிப்பு குழு விமானத்தை ஆய்வு செய்து வருகிறது.

பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருந்துகிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விமான நிறுவனத்தின் தகவலின்படி, அனைத்து பயணிகளுக்கும் மாற்று விமானத்தில் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காயம் அடைந்த பயணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு

# "தெரு நாய்களை கருணை கொலை செய்யலாம்"



மோசமான காயமடைந்து, நோய் வாய்ப்பட்டு சிரமப்படும் தெரு நாய்களை கருணை கொலை செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

தெரு நாய்களால் ரேபிஸ் உள்ளிட்ட நோய் பாதிப்புகள் ஏற்படும் நிலையில் தமிழ்நாடு அரசின் கால்நடை துறை அரசாணை வெளியிட்டது.

பதிவு செய்யப்பட்ட கால்நடை மருத்துவர்கள் மூலம் கருணை கொலை செய்ய வேண்டும். கருணைக்கொலை செய்யப்படும் நாய்கள் குறித்த ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். கருணை கொலை செய்யப்படும் தெரு நாய்களை முறையாக அடக்கம் செய்ய வேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலையில் சுற்றித்திரியும் விலங்குகளை கட்டுப்படுத்துவது குறித்த கொள்கை விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டேராடூன்

### கூட்ட நெரிசலில் சிக்கி

# 6 பேர் மரணம்; 25க்கும் மேற்பட்டோர் காயம்

உத்தரகண்ட் மாநிலம் ஹரித்வாரில் மானசா தேவி கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 25க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

உத்தரகண்ட் மாநிலம் ஹரித்வாரில் மானசா தேவி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று சுவாமி தரிசனம் செய்ய ஏராளமானோர் கூடியுள்ளனர். அப்போது திடீரனெ கூட்ட



நெரிசல் ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டுள்ளனர்.

இந்த துயர சம்பவத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் 25க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

### மேற்கிந்திய தீவுகளை

# வென்றது அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுடனான நான்காவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியிலும் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் ஏற்கெனவே வென்ற அவுஸ்திரேலியா, சென். கிட்ஸில் ஞாயிற்றுக்கிழமை (27) அதிகாலை நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் 31 (15), றொமாரியோ ஷெப்பர்ட்டின் 28 (18), றொவ்மன் பவலின் 28 (22), ஜேஸன் ஹோல்டரின் 26 (16), பிரெண்டன் கிங்கின் 18 (10), அகீல் ஹொஸைனின் ஆ.இ 16 (10), மத்தியூ போர்டேயின் 15 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஆரோன் ஹார்டி 4-0-24-2, நாதன் எலிஸ் 4-0-21-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 206 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, கமரன் கிறீனின் ஆட்டமிழக்காத 55 (35), ஜொஷ் இங்லிஸின் 51 (30), கிளென் மக்ஸ்வெல்லின் 47 (18), ஹார்டியின் 23 (16) ஓட்டங்களோடு 19.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஜெடியாஹ் பிளேட்ஸ் 4-0-29-3 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்கிடையிலான ஐந்தாவது போட்டியானது செவ்வாய்க்கிழமை (29) அதிகாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# அமீரகத்தில் ஆசியக் கிண்ணம்



ஆசியக் கிண்ணத் தொடரானது ஐக்கிய அரபு அமீரகத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இத்தொடரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே நடாத்துகிறது.

இந்தியா, பாகிஸ்தான், அமீரகம், ஓமான் ஆகியன குழு ஏயிலும், இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஹொங் கொங் ஆகியன குழு பியிலும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் அவற்றுக்குள் மோதி முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறி அந்த நான்கு அணிகளுக்குள் போட்டிகள் இடம்பெற்று முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறவுள்ளன.

# மிலனிடம் தோற்ற லிவர்பூல்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனுடன் ஹொங் கொங்கில் சனிக்கிழமை (26) நடைபெற்ற சிநேகபூர்வப் போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் தோற்றது.

மிலன் சார்பாக நொவா ஒகஃபோர் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, றஃபேல் லியோ, ருபென் லொஃப்டஸ்-சீக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லிவர்பூல் சார்பாக டொமினிக் ஸபொஸ்லாய், கோடி கக்போ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.




# முத்தரப்புத் தொடர்: சம்பியனானது நியூசிலாந்து

முத்தரப்பு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் நியூசிலாந்து சம்பியனானது.

சிம்பாப்வே பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை வென்றே நியூசிலாந்து சம்பியனானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா.

நியூசிலாந்து: 180/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 47 (27), டெவொன் கொன்வே 47 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுங்கி என்கிடி 2/24 [4], கவெனா மபஹா 1/35 [4], செனுரன் முத்துசாமி 1/27 [3], நன்ட்ரே பேர்கர் 1/41 [4])

தென்னாபிரிக்கா: 177/6 (20 ஓவ.) (லுஹான்-ட்றீ பிறிட்டோறியஸ் 51 (35), றீஸா ஹென்ட்றிக்ஸ் 37 (31), டெவால்ட் பிறெவிஸ் 31 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 2/19 [3], அடம் மில்ன் 1/27 [4])

போட்டியின் நாயகன்: மற் ஹென்றி.

தொடரின் நாயகன்: மற் ஹென்றி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 28, ஜூலை 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.